தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

துன்முகி, பங்குனி 8, திருவள்ளுவர் ஆண்டு–2048

2017 மார்ச் 21, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி."

நம் வருமானத்தின் அளவு அறிந்து அதற்குத் தக்கபடிதான் பிறருக்கு உதவ வேண்டும். அதுவே பொருளைச் சேமித்துப் பாதுகாத்து வாழும் வாழ்க்கை நெறியாகும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள் விடைகள். வினா வரிசை எண் 51, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பழனியப்பன், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள்.*

51—

சாலை அமைத்தல்

***118—திரு. பெ. பழனியப்பன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், மணலூர் கிராமத்துடன் நல்லம்பள்ளியை இணைக்கும் காளிக்கரம்பு சாலையை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) ஆம். தருமபுரி மாவட்டம், மணலூர் கிராமத்திலிருந்து நல்லம்பள்ளியை இணைக்கும் காளிக்கரம்பு சாலை அமைக்கும் பணிக்காக, நல்லம்பள்ளி வட்டார வளர்ச்சி அலுவலரால் ரூ.21.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில், இயற்கையாக வளர்ந்துள்ள மரங்களை வனப் பணி அல்லாத பிற பயன்பாட்டிற்காக வெட்டும்போது உச்ச நீதிமன்றத்தில் முன்னனுமதி பெறப்பட்டு, மத்திய அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டுமென்ற நடைமுறை உள்ளது. நல்லம்பள்ளி வட்டார வளர்ச்சி அலுவலர் உச்ச நீதிமன்றத்தில் இம்முன்னனுமதி ஆணையைப் பெறும்பட்சத்தில், வனத் துறை மத்திய அரசின் ஒப்புதலைப் பெற்று, சாலை அமைக்கும் பணிக்கு அனுமதி வழங்க ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பழனியப்பன் அவர்கள்.*

திரு. பெ. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று 'காடுகள் தினம்.' (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, காடுகளை, மரங்களைப் பாதுகாக்கின்ற பணியில் ஈடுபட்டிருக்கின்ற நம்முடைய அரசுக்கு என்னுடைய மனமார்ந்த காடுகள் தின வாழ்த்துகளை முதலில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதியில் 3 ஒன்றியங்கள் இருக்கின்றன. அந்த மூன்று ஒன்றியங்களில் தருமபுரி ஒன்றியத்தில் மட்டும் 28 ஊராட்சிகள் இருக்கின்றன. அந்த 28 ஊராட்சிகளில் உள்ள கோடுஹள்ளி, திப்பிரெட்டிஹள்ளி, கொண்டகரஹள்ளி மற்றும் முத்தம்பட்டி ஆகிய நான்கு ஊராட்சிகளை நூலஹள்ளி, ரெட்டிஹள்ளி, காப்புக்காடு என்ற ஒரு மிகப்பெரிய மலை தனியாகப் பிரிக்கின்றது. ஆகவே, அந்த நான்கு ஊராட்சிகளைச் சார்ந்தவர்கள் தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கோ, தாலுகா அலுவலகத்திற்கோ, ஒன்றிய அலுவலகத்திற்கோ, கல்லூரிகளில் படிப்பதற்கோ, பள்ளிகளில் படிப்பதற்கோ

2017 மார்ச் 21]

அல்லது மருத்துவ வசதி வேண்டுமென்று சொன்னாலோ, அந்த மலையைக் கடந்து வரவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அந்த நிலையை மாற்ற வேண்டும். அவர்கள் தருமபுரி பகுதிக்கு வரவேண்டுமென்று சொன்னால், 40 கிலோ மீட்டர் தூரம் கடந்து கொடசல்பட்டி கூட்ரோடு வந்து தருமபுரிக்கு வர வேண்டும். இது நீண்ட நாள் கோரிக்கை. ஆகவே, காளிக்கரம்பு சாலையை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்பது மக்களுடைய நீண்டகால கோரிக்கையாக இருக்கின்றது. ஏற்கெனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, அதற்கு என்னென்ன வசதிகள் வேண்டுமோ அவையெல்லாம் மாவட்ட நிருவாகத்தால் அனுமதிக்கப்பட்டு, அதற்காக திட்டங்களெல்லாம் பரிந்துரைக்கப்பட்டிருக்கின்றன. அங்கு மலைவாழ் மக்கள் குடியில்லா சான்று கொடுக்கப்பட்டிருக்கின்றது. 70 மரங்களை வெட்ட வேண்டுமென்று வனத் துறையினர் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, மரம் வெட்டுவதற்கான அனுமதியை உச்ச நீதிமன்றத்திலிருந்து நாம் பெற வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உச்ச நீதிமன்றத்திடம் வலியுறுத்தி, அதைப் பெற்றுத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனியப்பன் அவர்கள் முன்னாள் அமைச்சர். சட்டதிட்டங்கள் எல்லாமே அவருக்குத் தெரியும். முதலிலே அவர்கள் பேசும்போது இன்றைக்கு 'காடுகள் தினம்' என்று சொன்னார்கள். சுத்தத் தமிழில் 'உலக வன நாள் விழா' என்று சொல்வது சிறப்பாக இருக்கும். அதைவிட தமிழில் 'காடு' என்று சொன்னாலும் தவறு இல்லை. உலகளவில் ஒவ்வொரு வருடமும் இன்றைய தினத்தில் 'உலக வன நாள்' கொண்டாடப்படுகிறது. ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் அறிவுரையின்படி, 1971 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் மார்ச் 21 ஆம் தேதி உலக வன நாள் விழா கொண்டாடப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு வருடமும் ஒரு மையக் கருத்தினைக் கொண்டு இந்த வன விழா கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்த வருடத்தின் கருப்பொருள்* (Theme) 'Forest and Energy' *'வனம் மற்றும் ஆற்றல்' ஆகும். சென்ற வருடம் 'வனம் மற்றும் நீர்' என்ற*

மையப் பொருளைக் கொண்டு விழா கொண்டாடப்பட்டது. விழாவின் முக்கிய நோக்கம் என்பது, பொதுமக்களின் மத்தியில் விழிப்புணர்வை உண்டாக்கி, வனங்களை காப்பது என்பதனால் இந்த உலக வன நாள் விழாவிலே, மாண்புமிகு உறுப்பினர்கள் தம்மால் முடிந்த அளவிற்கு வனத்தைக் காத்து, நாட்டையும் செழிப்பாக வைக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து, இந்த 'வன நாள் விழாவில்' நல் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10–05

அடுத்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே அவருடைய துணைக் கேள்வியினை கேட்டிருக்கிறார்கள். அவருடைய தொகுதிக்குட்பட்ட நல்லம்பள்ளியை இணைக்கும் காளிக்கரம்பு சாலை அமைக்கும் பணிக்கு நல்லம்பள்ளி வட்டார வளர்ச்சி அலுவலரால் 21.50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சாலையின் மொத்த நீளமான 8.7 கிலோமீட்டரில், 6.143 கிலோமீட்டர் நூலஹள்ளி, ரெட்டிஹள்ளி, காப்புக்காடு வழியாக, thick forest வழியாகச் செல்கிறது. இந்த காப்புக்காட்டின் மூல அறிவிக்கையில் original notification–ல் உத்தேசிக்கப்பட்டுள்ள இந்தச் சாலை செல்லும் தடத்தில் பாதைக்கான அனுமதியே இல்லை. எனவே காப்புக்காட்டுக்குள் அமைக்கப்படவேண்டிய 6.143 கிலோமீட்டர் நீள சாலைக்குத் தேவையான 4.607 ஹெக்டேர் வன நிலம் ஒதுக்கீடு செய்யக்கேட்டு நல்லம்பள்ளி வட்டார வளர்ச்சி அலுவலரால் 1980 ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு (2)–ன்கீழ் மத்திய அரசுக்கு பிரேரணை அனுப்பப்பட்டது. அதன்மீது மத்திய அரசால் கூடுதல் விவரங்கள் கேட்கப்பட்டு, முதன்மை தலைமை வனப் பாதுகாவலரால் 11–7–2014 நாளிட்ட கடிதம்மூலம் விவரங்கள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டன. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனியப்பன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல சாலை அமைக்கும் பகுதியில் இயற்கையாக வளர்ந்துள்ள 70 மரங்களை வெட்டுவதற்கு உச்ச நீதிமன்ற ஆணை பெறவேண்டிய நடைமுறை இருப்பதால், நல்லம்பள்ளி வட்டார வளர்ச்சி அலுவலரிடமிருந்து முழுமையான விவரங்கள் பெறப்பட்டதும் உரிய கருத்துரு மத்திய அரசுக்கு அனுப்பப்பெற்று, சாலை அமைக்கும் பணிக்கான அனுமதி பெறப்படும். வன இலாகா அதற்கு முன்னுரிமை கொடுத்து செய்யும் என்ற உறுதியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2017 மார்ச் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பழனியப்பன் அவர்கள்.*

திரு. பெ. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டபோது, அந்த காளிக்கரம்பு பகுதியில் சாலைக்கான அறிகுறியே இல்லை என்ற ஒரு கருத்தையும் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே எவ்வளவு நிலம் forest இடத்திலிருந்து நமக்குத் தேவையோ, அவ்வளவு நிலத்திற்கான மூன்று மடங்கு நிலத்தை நல்லம்பள்ளி ஒன்றியத்தில் நெற்குன்றி என்ற கிராமத்தில் வழங்க மாவட்ட நிர்வாகம் அனுமதி வழங்கியிருக்கிறது. அங்கு மரங்களை வெட்ட வேண்டுமென்றால் மத்திய வனப் பாதுகாப்புச் சட்டம் 1980–இன்படி உச்ச நீதிமன்றத்தின் பசுமை தீர்ப்பாயத்தின் அனுமதியைப் பெறவேண்டும். ஆகவே இந்த மனுவைப் பொறுத்தவரையில், உச்ச நீதிமன்றத்தினுடைய பசுமைத் தீர்ப்பாயத்தில் இது நிலுவையிலிருக்கிறது. அதை நம்முடைய அரசு வழக்கறிஞர்களிடம் எடுத்துச்சொல்லி உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெற்றுத் தரவேண்டும்.*

மேலும், கடந்த 11–3–2017 ஆம் நாளன்று மாவட்ட வன அலுவலர், திட்ட அலுவலர் மற்றும் அதிகாரிகளோடு நானும் சேர்ந்து அந்தப் பகுதியிலே சென்று பார்த்தோம். அந்த மலையில் நாங்கள் நடந்தே போனோம். அப்படி போகிறபொழுது power grid–மின்சார தொகுப்பு நிலையத்திற்கு தூத்துக்குடியிலிருந்து வரக்கூடிய உயர் அழுத்த மின்கோபுர line அந்தப் பகுதியிலே வருகிறது. முதலில் போகும்போது அந்த line இல்லை. ஆனால் இரண்டாவது முறையாக அந்த மலைப் பகுதிக்கு போகும்போது அந்த line அங்கே அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த power grid–குறித்து விசாரித்தபோது அவர்களும் உச்ச நீதிமன்றத்தில்தான் அனுமதியைப் பெற்றிருக்கிறார்கள். ஆகவே, அரசு வழக்கறிஞர்கள்மூலம் உச்ச நீதிமன்றத்தின் பசுமை தீர்ப்பாயத்தில் இருக்கும் வழக்கினைக் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அழுத்தமாக எடுத்துச்சொல்லி, இரண்டு வருட காலமாக நிலுவையிலிருக்கிற அந்தப் பணியை முடித்துக் கொடுக்கவேண்டும். எப்படி மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விரைவாக அதற்கான அனுமதியை அளித்ததோ, அதைப்போல உச்ச நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அழுத்தம் கொடுத்து இந்தத் திட்டத்தை கூடிய விரைவில் மக்கள் பயன்பாட்டுக்கு வரும்படி அந்தச் சாலை அமைப்பதற்கான

[2017 மார்ச் 21

நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் (Ministry of Environment, Forest and Climate Change) துறையின்மூலம் விடுவிக்கப்பட்ட இணையதள முகவரிமூலம் முதலில் விண்ணப்பிக்க வேண்டும். அனுமதிக்காக அனுப்பப்படும் பகுதியில் வன நிலங்கள் தவிர, ஏனைய நிலங்கள் இல்லை என மாவட்ட ஆட்சியர் சான்று தரவேண்டும். உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்படி மாற்றப்படும் வன நிலத்திற்கான நிகர மதிப்புத் தொகையை வனத் துறைக்கு செலுத்த வேண்டும். மாற்றப்படும் வன நிலத்திற்கு ஈடாக இரண்டு மடங்கு அளவிலான வனமில்லா நிலம் (non-forest land) வனத் துறை பெயரில் உரிமை மாற்றம் செய்து வழங்கப்பட வேண்டும். இந்த நிலத்தில் தோட்டம் உற்பத்தி செய்வதற்கு மதிப்புத் தொகை மற்றும் 7 முதல் 10 வருட காலத்திற்கான தோட்ட பராமரிப்புத் தொகை ஆகியவற்றை வனத் துறைக்குச் செலுத்த வேண்டும். தமிழக அரசால் நிர்ணயிக்கப்பட்ட விகிதப்படி வருடாந்திர குத்தகைத் தொகையை வனத் துறைக்குச் செலுத்த வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டது பசுமைத் தீர்ப்பாயத்தின்மூலமாக இருக்கின்ற வழக்கறிஞர்கள் உச்ச நீதிமன்றத்தில் அழுத்தம் தரவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த நடைமுறையில் அவர்களுடைய மாவட்ட நிர்வாகம் உரிய அனுமதிக்குரிய விஷயங்களில் ஏதாவது இதுபோன்று அங்கே உச்ச நீதிமன்றத்தில் தொய்வு ஏற்பட்டிருக்கும் என்று கருதுகிறேன். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதனுடைய முக்கியத்துவத்தைக் கருதி, இந்த புள்ளிவிவரங்களை, ஆதாரங்களை எங்களிடம் நிச்சயமாகக் கொடுப்பார்கள் என்று கருதுகிறேன். அந்த ஆதாரத்தின் அடிப்படையில், உச்ச நீதிமன்றத்தில் இருக்கின்ற தமிழ்நாடு அரசின் பசுமைத் தீர்ப்பாயத்தினுடைய வழக்கறிஞர் மற்றுமுள்ளவர்களுக்கு அழுத்தம் கொடுத்து, விரைவிலே இதற்கான முயற்சி எடுக்கப்படும் என்கிற உறுதியை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2017 மார்ச் 21]

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 52, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

52—

மின் உற்பத்தி

***798—திரு. அர. சக்கரபாணி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒட்டன்சத்திரம் நகராட்சி, காந்தி காய்கறி சந்தையிலுள்ள காய்கறிக் கழிவுகளிலிருந்து மின் உற்பத்தி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்கள் கேட்டிருக்கின்ற கேள்வியானது நகராட்சித் துறை சம்பந்தப்பட்ட கேள்வி. இருந்தாலும், காய்கறிக் கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரிக்க வேண்டுமென்று மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அவருடைய நகராட்சியில் அதுபோன்று மின்சாரம் தயாரிப்பதற்கு ஏற்பாடு செய்தால், மின்சார வாரியத்தில் அதை வாங்குவதற்குத் தயாராக இருக்கின்றோம். அதற்கான ஏற்பாடுகளைச் செய்வது குறித்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் துணைக் கேள்விக்கு மாண்புமிகு நகராட்சித் துறை அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது சொல்வார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே மிகப்பெரிய காய்கறி மார்க்கெட்*